# <u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII code of Criminal Procedure)

-------

## IN THE COURT ASSISTANT SESSIONS JUDGE, HOSUR.

## SC.No. 76/2022

## CNR.No. TNKI05-000978-2022

Sessions Case

Deposition of witness for Prosecution **PW 1**

Name : Venkataraj

Father's Name :Beerappa

Village :

Taluk :

Caste :

calling :

Religion :

Age : 47

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.12.2022

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் சூளகிரியிலிருந்து உத்தனப்பள்ளியில் செல்லும் சாலையில் உள்ள 3034 டாஸ்மார்க் நிறுவனத்தில் விற்பனையாளராக கடந்த 7 வருடங்களாக பணி புரிந்து வருகிறேன். என்னுடன் கடையில் அம்பேத், சேகர் மற்றும் குமரேசன் ஆகியோர் வேலை செய்து வருகிறார்கள்.

கடந்த 09.08.2015 அன்று காலை 10 மணிக்கு வழக்கம் போல் கடையை திறந்தேன். அப்போது என்னுடன் அம்பேத், சேகர் மற்றும் குமரேசன் ஆகியோரும் இருந்தார்கள். அன்றைய தினம் இரவு 9.30 மணிக்கு குமரேசனுக்கு உடல்நிலை சரியில்லை என்று மேற்படி அம்பேத், சேகர் மற்றும் குமரேசன் ஆகியோர் கிளம்பி சென்றுவிட்டனர்.

அதன் பிறகு நான் கடையில் உள்ள பொருட்களை சரி செய்து அடுக்கி வைத்து விட்டேன். பணத்தை எண்ணாமல் என்னுடைய ஒரு பேக்கில் போட்டுக் கொண்டேன்.

இரவு 10 மணிக்கு கடையை மூடிவிட்டு என்னுடைய சூப்பர் எக்செல் வண்டியில் அந்த பேக்கை முன்னால் கட்டிக் கொண்டு நான் என்னுடைய வீட்டிற்கு கிளம்பிவிட்டேன்.

என்னுடைய வீடு தியாகரசனப்பள்ளியில் உள்ளது. வீட்டிற்கு செல்லும் வழியில் சூளகிரி மேம்பாலம், சர்வீஸ் ரோட்டில் புதிய பஸ் ஸ்டாண்டிற்கு எதிரில் செல்லும் பொழுது பின்னால் வந்த அப்பாச்சி வண்டி கிரே கலர் வண்டியில் வந்த மூவர் என்னுடைய வண்டியை மடக்கினார்கள். அந்த வண்டியில் நடுவில் அமர்ந்திருந்த நபர் என்னுடைய கழுத்தின் பின்புறம் தன்னுடைய கையால் ஓங்கி அடித்தார். நான் தடுமாறி கீழே விழுந்து விட்டேன், வண்டியும் கீழே விழுந்து விட்டது.

வண்டியின் கடைசியாக குண்டாகவும், உயரமாகவும் இருந்த 3வது எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியால் பையை அறுத்துக் கொண்டு கிருஷ்ணகிரி நோக்கி சென்று விட்டார். நான் கத்தியை பார்த்து பயந்து அங்கிருந்து ஓடிவிட்டேன்.

அதன்பிறகு இந்த சம்பவம் தொடர்பாக நான் என்னுடைய மேலதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேன். நான் தகவல் அளித்த சிறிது நேரம் கழித்து 1/2 மணி அல்லது ஒரு மணி நேரம் இருக்கலாம், என்னுடைய மேலதிகாரிகள் அனைவரும் வந்தார்கள். மேலதிகாரிகள் இது தொடர்பாக காவல் நிலையத்திற்கு தகவல் அளித்தார்கள். போலீசாரும் வந்து என்னை விசாரித்தார்கள்.

போலீசார் என்னிடம் பணம் எவ்வளவு திருடு போனது என்று கேட்டார்கள். அதற்கு நான் பணத்தை எண்ணாமல் வந்த காரணத்தினால் எவ்வளவு என்பது எனக்கு சரியாக தெரியவில்லை என்று கூறினேன்.

அதன் பிறகு கடையில் ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது என்பதை சரிபார்த்து புகார் அளிக்கும் படி என்னுடைய மேலதிகாரிகள் எனக்கு தெரிவித்தார்கள். அதனடிப்படையில் மறு நாள் காலை 10 மணிக்கு கடைக்கு வந்தேன். அப்போது என்னுடைய மேலதிகாரிகளும் காவல் அதிகாரிகளும் வந்திருந்தார்கள். என்னுடைய மேலததிகாரிகள் கடையில் ஸ்டாக்குகள் எவ்வளவு இருக்கிறது என்பதை சரிபார்த்தார்கள். அவ்வாறு சரி பார்க்கும் பொழுது ரூ.1,64,980/- திருடு போனது தெரிய வந்தது.

எவ்வளவு பணம் திருடு போனது என்பது தெரிய வந்த பிறகு மதியம் 3 மணிக்கு நானும், சேகரும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அந்த புகாரில் நான் தான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் அந்த புகார். அது **அ.த.சா.ஆ.1.**

இந்த புகார் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு சிறிது நாட்கள் கழித்து 07.10.2015 அன்று என்னை சேலம் மத்திய சிறைச்சாலைக்கு அடையாளம் காட்டுவதற்காக அழைத்துச் சென்றார்கள். அப்போது மணி சுமார் மதியம் 12.30 மணி இருக்கும்.

அப்போது அடையாள அணிவகுப்பு நடத்தினார்கள். அப்போது நீதிபதி அம்மா இருந்தார்கள். அப்போது நான் 3 நபர்களை அடையாளம் காட்டினேன். அன்று நான் அடையாளம் காட்டிய 3 பேரில் ஆஜர் முதல் எதிரியும், ஆஜர் 3வது எதிரியும் இருந்தார்கள். அவர்களை தான் நான் அன்று அடையாளம் காட்டினேன். அதன் பிறகு நான் கடைக்கு வந்து விட்டேன்.

என்னிடம் காட்டப்படும் கத்தியை கொண்டு தான் அன்று எதிரி என் வண்டியில் இருந்த பையை அறுத்து எடுத்துக் கொண்டுச் சென்றார்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வது முடித்து விட்டு ஐடிஐ முடித்துள்ளேன். சம்பவம் நடப்பதற்கு முன்னால் நான் எத்தனை வருடம் அந்த கடையில் வேலை பார்த்தேன் என்றால் 7 வருடம்.

நாங்கள் காலையில் 1 முறை அக்கவுண்டை கேரி அவுட் செய்ய வேண்டும் என்றாலும், அதே போல் மாலையில் எவ்வளவு இருக்கிறது என்று ஒரு முறை அக்கவுண்டை க்ளோஸ் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

ஒவ்வொரு நாளும் மாலையில் கணக்கை முடித்த பிறகு அது குறித்து எங்களுடைய மேலதிகாரிகளுக்கு தட்டச்சு செய்து பேப்பர் மூலம் அனுப்பலாம் அல்லது ரிஜிஸ்டரை போட்டோ எடுத்து வாட்ஸ் அப் மூலம் தகவல் அனுப்ப வேண்டும் அல்லது மொபைலில் டைப் செய்தாவது அனுப்ப வேண்டும் என்று சொன்னால் மாலையில் அனுப்ப மாட்டோம், காலையில் தான் அனுப்புவது வழக்கம்.

எங்களுடைய அலுவலகத்தில் கணக்கை முடித்து மாலையே அது குறித்து தகவல் அளிக்க வேண்டும் என்று விதி உள்ளதா அல்லது மறு நாள் காலையில் அனுப்பிக் கொள்ளலாம் என்ற விதி உள்ளதா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

கடந்த 7 வருடங்களாக பணி புரிந்த நிலையில் விதி இருப்பது தெரியாது என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒவ்வொரு நாளும் பணமாக வசூல் செய்யப்பட்ட தொகை மறு நாள் காலை 10.30 மணியில் இருந்து 12 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும் என்றால் சரிதான்.

வசூலான பணத்தை நான் வீட்டிற்கு எடுத்து செல்வதாக இருந்தால் எவ்வளவு பணம் வசூலானது, அதை நான் வீட்டிற்கு எடுத்து செல்கிறேன் என்ற விவரத்தை என் மேலதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு தான் எடுத்து செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான், ஆனால் திருட்டு பயம் இருப்பதால் வசூலான தொகையை வீட்டிற்கு எடுத்துச் சென்று வைத்துக் கொள்ளலாம் என்று வாய்மொழி உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

வசூலான பணத்தை எண்ணாமல் வீட்டிற்கு எடுத்து செல்லலாம் என்று யார் எனக்கு தெரிவித்தார்கள் என்றால், மாவட்ட மேலாளர் கூறியதன் பேரில் என்னுடைய சூப்பரைசர் சேகர் என்னிடம் திருட்டு பயம் இருப்பதால் வசூலான பணத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று பத்திரமாக வைத்து மறு நாள் காலை வங்கியில் செலுத்தும் படி கூறியிருந்தார், அன்றைய தினம் மற்றவர்கள் வீட்டிற்கு சென்று விட்டதால் பணத்தை என்னால் தனியாக எண்ண முடியாத காரணத்தினால் அதை நான் எண்ணாமல் எடுத்துச் சென்றேன்.

ஒவ்வொரு டாஸ்மாக்கிலும் வசூலான பணத்தை வைப்பதற்காக பாதுகாப்பு இரும்பு பெட்டகம் உள்ளது என்றால் சரிதான். அது போன்ற பெட்டகம் எங்கள் டாஸ்மாக்கிலும் உள்ளது என்றால் சரிதான்.

அவ்வாறு வசூலான பணத்தை பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து விட்டு மறுநாள் வங்கியில் செலுத்த போகும் போது வசூலான பணம் ரூபாய் 50,000/- க்கு மேல் இருந்தால் துணைக்கு ஒரு ஆள் அழைத்து செல்ல வேண்டும் என்பது விதி என்று சொன்னால் சரிதான்.

பகலிலேயே பணத்தை எடுத்து செல்லும் பொழுது துணைக்கு ஆள் வைத்துக் கொள்ள வேண்டும் என்று விதி உள்ள நிலையில் இரவில் நான் தனி ஆளாக தான் பணத்தை எடுத்துச் சென்றேன் என்றால் சரிதான்.

அன்றைய தினம் வசூலான பணத்தை நானும், என்னுடைய சகாக்களும் கையாடல் செய்து விட்டு பணம் திருடு போனதாக ஒரு பொய் புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன்.

அந்த புகாரில் இரவு 10.05 மணிக்கு இடைசெறுகல் செய்துள்ளேன் என்றால் சரிதான், நான் புகார் எழுதும் பொழுது நேரத்தை குறிப்பிட தவறியதால் நேரத்தை குறிப்பதற்காக அவ்வாறு எழுதினேன்.

இந்த புகார் எழுதும் பொழுது யார் என்னுடன் இருந்தார்கள் என்றால் சூப்பரைசர் சேகர் இருந்தார்.

மேற்படி புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேனா என்றால் ஆமாம்.

சம்பவம் நடந்த பின்பு 17 மணி நேரம் கால தாமதமாக தான் இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஸ்டாக்குகளை சரிபார்த்து பணம் எவ்வளவு திருடு போனது என்பதை பார்ப்பதற்காக இந்த கால தாமதம் ஏற்பட்டது.

சம்பவம் நடந்தது இரவு 10.05 மணிக்கு என்றால் சரிதான். மறுநாள் நான் எத்தனை மணிக்கு கடைக்கு சென்றேன் என்றால் காலை 10 மணிக்கு சென்றேன்.

எங்களுடைய கடை சூளகிரி பஸ் ஸ்டாண்ட்டில் இருந்து எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் தோராயமாக 400, 500 மீட்டர் இருக்கலாம், குறிப்பாக எவ்வளவு என்பது தெரியவில்லை.

சம்பவம் பிளை ஓவர் க்கு கீழே நடந்ததா என்றால் பிளை ஓவர் லிருந்து செல்லும் சர்வீஸ் ரோட்டில் பேருந்து நிலையத்திற்கு எதிரில் நடந்தது.

எங்கள் கடையில் இருந்து கிருஷ்ணகிரி  செல்லும் சாலையில் வடக்கு பக்கம் கடை உள்ளதா அல்லது தெற்கு பக்கம் உள்ளதா என்றால் கடை தெற்கு பக்கம் உள்ளது.

நான் சம்பவ சமயத்தில் எந்த திசையில் சென்று கொண்டிருந்தேன் என்றால் கிருஷ்ணகிரி  செல்லும் சாலையில் சூளகிரி  செல்லும் சர்வீஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்தேன்.

சம்பவம் எங்கு நடந்தது என்றால் சர்வீஸ் ரோட்டில் தான் நடந்தது. நான் புகார் அளிக்கும் பொழுது முதல் நாள் எவ்வளவு வரவு செலவு இருந்தது அதற்கான லெட்ஜர் விவரங்கள், பதிவேட்டு விவரங்கள் ஆகியவற்றை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

நாங்கள் எங்கள் கடைகளில் ரூபாய் 100 க்கு விற்பனை செய்தாலும், ரூ.10 க்கு விற்பனை செய்தாலும் ஒவ்வொரு விற்பனைக்கும் பில் போட வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

அவ்வாறு ஒவ்வொரு விற்பனை செய்யப்பட்ட பில்களை சேகரித்து எவ்வளவு பணம் திருடு போனது என்று அதற்குரிய பில்களின் விவரங்களை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

ஒவ்வொரு நாளும் கணக்கு முடித்த பிறகு மறு நாள் மேலதிகாரிகள் பதிவேடுகளை ஆய்வு செய்யும் பொழுது ஆய்வு செய்வது குறித்து தேதி குறிப்பிட்டு கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்களையாவது போலீசார் என்னிடம் கேட்டு வாங்கினார்களா என்றால் இல்லை.

இந்த புகார் கொடுத்த பிறகு எங்களுடைய துறையில் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

சம்பவம் நடந்ததற்கு தெற்கு திசையில் தான் காவல் நிலையம் உள்ளது என்றால் சம்பவ சமயத்தில் காவல் நிலையம் பேரிகை ரோட்டில் இருந்தது.

சம்பவம் பேருந்து நிலையத்திற்கு எதிரில் நடந்த நிலையில் கத்தியை காண்பித்து பணத்தை எடுத்து செல்லும் போது நான் கூச்சலிட்ட போது யாரும் வந்தார்களா என்றால் பேருந்து நிலையம் சற்று உள்நோக்கி இருந்தது, நான் கத்தியது கேட்டு யாரும் வரவில்லை.

சம்பவம் சர்வீஸ் ரோட்டில் இருட்டில் நடந்ததால் யார் என்பது என்னால் அடையாளம் பார்க்க முடியவில்லை என்றால் சரியல்ல, பேருந்து லைட் அங்கு இருந்தது, வெளிச்சம் இருந்தது, என்னால் அடையாளம் பார்க்க முடிந்தது.

என்னிடம் பணம் பறித்தவர்கள் குட்டையா, நெட்டையா, ஒல்லியா, தடியா என்ன நிறத்தில் இருந்தார்கள், என்ன நிற ஆடை அணிந்திருந்தார்கள் என்ற விவரத்தை நான் என்னுடைய புகாரில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

சம்பவம் குறித்து நான் மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக அவர்களும், காவல் அதிகாரிகளும் வந்ததாக கூறுகிறேன், அவர்கள் வரும் வரை நான் அந்த இடத்திலேயே இருந்தேனா என்றால் ஆமாம்.

என்னை எந்த காவல் அதிகாரி முதலில் விசாரித்தார் என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

சம்பவ இடத்தில் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

நான் புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

சேலம் சிறைச்சாலைக்கு என்னை அழைத்துச் சென்ற காவல் அதிகாரி யார் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் இவர்கள் தான் இன்னார் என்று எனக்கு அடையாளம் காட்டினார்கள் என்றால் இல்லை, அவ்வாறு எதுவும் செய்யவில்லை.

எதிரிகளை கைது செய்தவுடன் நான் அடையாளம் காட்டுவதற்கு முன்பு போலீசார் எனக்கு எதிரிகளை அடையாளம் காட்டியதால் தான் நான் அடையாள வகுப்பில் அவர்களை அடையாளம் காட்டினேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் சேலம் செல்லும் பொழுது என்னுடன் எத்தனை போலீசார் வந்தார்கள் என்றால் ஒருவர் தான் என்று நினைக்கிறேன்,சரியாக ஞாபகம் இல்லை.

சேலம் சிறையில் அடையாள அணிவகுப்பு நடந்த போது எந்த இடத்தில் எவ்வளவு பேரை நிறுத்தியிருந்தார்கள் என்றால் எந்த இடம் என்பது சரியாக நினைவு இல்லை, பன்னிரெண்டு, பன்னிரெண்டு பேராக நிறுத்தி வைத்திருந்தார்கள்.

நான் அடையாளம் காட்டிய சிறை சென்ட்ரல் ஜெயிலா, சப் ஜெயிலா என்றால் சரியாக நினைவு இல்லை.

சிறைச்சாலையில் இரண்டு காம்பவுண்டுகள் இருக்கும் என்றாலும், அதன் பிறகு செல்கள் இருக்கும் என்றாலும் அதில் எந்த இடத்தில் வைத்து நான் அவர்களை அடையாளம் காட்டினேன் என்றால் இரண்டாம் காம்பவுண்டை தாண்டி உள்ளே அழைத்துச் சென்றார்கள், அங்கு தான் அடையாளம் காண்பித்தேன், எந்த இடம் என்று சரியாக நினைவு இல்லை.

மொத்தம் எத்தனை முறை அடையாளம் காட்டினேன் என்றால் ஒவ்வொருவரையும் ஒரு முறை அடையாளம் காட்டினேன், மொத்தம் 3 முறை அடையாளம் காட்டினேன்.

ஒவ்வொரு முறையும் நான் அடையாளம் காட்டும் போது எத்தனை நபர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள் என்றால் 12 நபர்கள்.

முதலில் எனக்கு காட்டிய 12 நபர்களை காட்டிய பிறகு மற்றொரு 12 நபர்களை காட்டும் பொழுது முதலில் காட்டிய நபர்களை எங்கு வைத்திருந்தார்கள் என்றால் முதலில் எனக்கு 12 நபர்களை காட்டிய பிறகு என்னை அங்கிருந்து அழைத்துச் சென்றுவிட்டார்கள், பிறகு தான் மற்ற நபர்களை காண்பிப்பதற்கு என்னை அழைத்து வந்தார்கள்.

என் முன்னால் முதலில் நிறுத்தப்பட்டிருந்த 12 நபர்கள் தான் மறுமுறை அடையாளம் காட்டிய போதும் நிறுத்தப்பட்டிருந்தார்களா என்றால் எனக்கு சரியாக நினைவு இல்லை.

நான் மூன்று முறை அடையாளம் காட்டிய போது என் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த நபர்கள் மொத்தம் 36 பேரா அல்லது எத்தனை நபர்கள் என்பது எனக்குத் தெரியுமா என்றால் எனக்கு சரியாக நினைவு இல்லை.

நான் எவ்வளவு தூரத்தில் இருந்து அவர்களை அடையாளம் காட்டினேன் என்றால், ஒவ்வொருவரிடமும் தொட்டு அடையாளம் காட்டும் படி கூறினார்கள், அதன் பேரில் நான் தொட்டு அடையாளம் காட்டினேன்.

நான் தொட்டு அடையாளம் காட்டிய நபர்களின் ஜாதி, இனம் ஆகியவற்றை என்னிடம் முன் கூட்டியே தெரிவித்திருந்தார்களா என்றால் இல்லை.

நான் அடையாளம் காட்டிய நபர்களுடன் நின்றிருந்த நபர்களின் ஜாதி, மதம், இனம் ஆகியவற்றை எனக்கு முன் கூட்டியே தெரிவித்திருந்தார்களா என்றால் இல்லை.

நான் அடையாளம் காட்டிய நபர்கள் காது குத்திருந்தார்களா, மச்சம் ஏதாவது இருந்ததா, குறிப்பாக ஏதாவது அடையாளம் காட்டினேனா என்றால் ஒருவருக்கு காது திருகப்பட்டிருந்தது சரியாக நினைவு இல்லை.

காது திருகப்பட்டிருந்ததாக கூறப்படும் நபரை நான் எத்தனையாவது நபராக அடையாளம் காட்டினேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

நான் மூன்று முறை வரிசையில் நின்றிருந்தவர்களை அடையாளம் காட்டியதாக கூறுகிறேன், அந்த வரிசைகளில் எத்தனை நபர்கள் தாடி, மீசை வைத்திருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

நான் அடையாளம் காட்டிய நபர்கள் மீசையும், தாடியும் வைத்திருந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

அந்த வரிசைகளில் தாடியும், மீசையும் இல்லாதவர்கள் இருந்தார்களா என்றால் அதுவும் ஞாபகம் இல்லை.

அந்த வரிசைகளில் மொட்டை போட்டவர்கள் இருந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

நான் அடையாளம் காட்டிய போது நீதிபதி அவர்களுடன் சூளகிரி போலீசார் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் அவர்கள் யாரும் அப்போது இல்லை.

நான் அடையாளம் காட்டிய போது அது குறித்து புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

நான் அடையாள அணிவகுப்பில் போலீசார் கூறியவாறு ஏற்கனவே எனக்கு காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டப்பட்ட நபர்களை தான் அன்றைய தினம் நான் அடையாளம் காட்டினேன் என்று சொன்னால் சரியல்ல.

சம்பவத்தின் போது என்னை அடித்ததாக கூறுகிறேன், எனக்கு எங்கு காயம் ஏற்பட்டது அதற்காக எங்கு சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் என்னை தோள்பட்டையில் தான் அடித்தார்கள், அது சாதாரண காயம் தான், அதற்காக நான் சிகிச்சை எங்கும் எடுத்துக் கொள்ளவில்லை.

நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், நாங்கள் கையாடல் செய்த பணத்தை நேர் செய்தவற்காக இது போன்ற சம்பவம் நடந்ததாக கூறி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்வது போல் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும், கத்தியை பயன்படுத்தவில்லை என்றாலும், பணப்பையை அறுத்து செல்லவில்லை என்றாலும் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்வது போல் உண்மையில் சம்பவம் நடைபெற்று இருந்தால் உடனே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், எங்கள் மேலதிகாரிகளை கலந்து ஆலோசித்து 17 மணி நேரம் கால தாமதமாக புகார் கொடுத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல, எவ்வளவு பணம் திருடு போனது என்று கணக்கு பார்ப்பதற்காக தான் கால தாமதம் ஏற்பட்டது.

சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்தில் மேலதிகாரிகளும், காவல் அதிகாரிகளும் வந்ததாக கூறுகின்ற நிலையில் உண்மையில் அவ்வாறு நடந்திருந்தால் உடனடியாக அப்போதே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் கால தாமதமாக கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

E SASIKALA

PRINCIPAL SUBORDINATE JUDGE
Digitally signed by E SASIKALA
Location: HOSUR
Date: 2022.12.08 19:43:59 +0530